
NEHRU
BAL PUSTAKALAYA

# பெருநாள் பரிசு

பிரேம் சந்த்





நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

நேரு பாலர் புத்தகாலயம்

# பெருநாள் பரிசு

**பிரேம் சந்த்**

தமிழாக்கம்

**திருமதி. பானு பந்த்**

சித்திரங்கள்

**பி.பி.காவடி**



ISBN 978-81-237-5165-8

முதல் பதிப்பு 1991
மறுபதிப்புகள் 2007, 2010 (சக 1932)

© அம்ரித் ராய், 1980
தமிழாக்கம் © நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா

Perunal Parisu (*Tamil*)

ரூ. **15.00**

வெளியீடு: இயக்குநர், நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா
நேரு பவன், 5 இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, ஃபேஸ்-II
வசந்த் குஞ்ச், புதுதில்லி - 110070



# பெருநாள் பரிசு

அன்று ஈத் பெருநாள் – ரம்ஜான் முடிந்து மக்களுக்கு நம்பிக்கையையும் களிப்பையும் ஊட்டும் பெருநாள். இயற்கையில் ஒரு புதுமை, ஒரு குதூகலம். எங்கும் பசுமை, நறுமணம். குளுமையுடன், அருளுடன் சூரியன் எழும்பி உலகத்தவரை வாழ்த்தினான். விடியும் முன்பே கிராமத்தில் ஒரே கலகலப்பு – ஈத் பிரார்த்தனை நடக்கும் மைதானமாகிய 'ஈத்கா'வுக்குப் போகும் ஏற்பாடுகளில் மக்கள் மூழ்கியிருந்தனர். சட்டையில் பித்தானைத் தைப்பதும், செருப்பைத் துடைப்பதுமாய் எல்லோரும் தயாராகிக் கொண்டிருந்தனர். இரண்டு மைல் தூரத்திலிருந்த ஈத்காவிற்குப் போய்வருவதற்குள் மதியம் ஆகிவிடும். அதனால் புறப்படும் முன்பே ஆடு மாடுகளுக்குத் தீனி காட்டியாக வேண்டும்.

பெரியவர்களுக்கு ஆயிரம் பொறுப்புகள், ஆயிரம் கவலைகள். ஆனால் சிறுவர்களின் உற்சாகம் கரைபுரண்டோடியது. பட்டினி, விரதம், வழிபாடு இவையெல்லாம் அவர்களுக்கு இல்லை. அவர்கள் பங்குக்கு மசூதி போகும் உற்சாகமும் உல்லாசமும் மட்டும்தான். எவ்வளவோ நாட்களாக எதிர்பார்த்திருந்த ஈத் இதோ வந்து விட்டது. புறப்படத் தயாராகி விட்டனர் எல்லோரும். பொறுமையற்று இங்கும் அங்குமாய் ஓடி ஆடினர் சிறுவர்கள். வீட்டுப் பெரியோர்களின் கவலைகளை அவர்கள் அறியார்கள். சேமியா கேசரி செய்ய வீட்டில் பாலும் சர்க்கரையும் இருக்கிறதா இல்லையா என்ற அக்கறை சிறுவர்களுக்கு ஏன்? மசூதியிலிருந்து திரும்பியதும் திராட்சையும் முந்திரியும் நெய்யும் மணக்கும் சேமியா கிடைக்கும் அவர்களுக்கு – அதை உண்டு களிப்பதுடன் அவர்களுடைய பொறுப்புத் தீர்ந்தது. அந்த ஈவிரக்கமற்ற செளதரி காயம் அலியை நோக்கி விடிந்ததும் விடியாததுமாய் அப்பாஜான் ஓடுகிறாரே! ஏன் என்று சிறுவர்களுக்குத் தெரியுமா என்ன? செளதரி கருணை கூர்ந்து உதவாவிட்டால் அன்று அந்த ஈத் உல்லாசமெல்லாம் பெரும் சோகமாய் விடும் என்று அவர்கள் அறிய நியாயமில்லை.

சிறுவர்களுக்குத் தங்கள் சட்டைப்பைகளில் குபேர சம்பத்தே இருப்பதாக எண்ணம். தங்களுடைய காசை அடிக்கடி வெளியில் எடுத்து எண்ணிப் பார்த்து மனமகிழ்ந்தனர். ஒன்று, இரண்டு — பத்து — பனிரெண்டு என்று மஹமூத் தன் காசை எண்ணினான் – நிதி அல்லவா பனிரெண்டு பைசா! மோஹஸினிடம்? ஒன்று, இரண்டு — பதினைந்து பைசா! உலகத்தையே வாங்கிவிடலாமே – பொம்மை, மிட்டாய், ஊதல், பந்து இன்னும் ஏதேதோ. கற்பனைக்கடங்காத செல்வக் குவியல். எல்லோரையும் விடக் குஷாலாயிருந்தான் ஹமீத். நாலைந்து வயதுதானிருக்கும் அவனுக்கு – இளைத்து

மெலிந்த உடல் போன வருடம் அவனுடைய அப்பா காலராவிற்கு இரையாகிவிட்டார். அதற்குப் பிறகு அம்மாவும் பலவீனமாய்க் கொண்டே வந்தாள். திடீரென்று ஒரு நாள் அவளும் போய்ச் சேர்ந்தாள். என்ன நோய் என்று யாருக்கும் தெரியவில்லை - அவள் சொல்லவேயில்லை. சொல்லியிருந்தால் மட்டும் யாரால் என்ன செய்திருக்க முடியும்? அவளுள் வளர்ந்து பெருகிய வேதனையை தன்னுள்ளேயே சகித்துக் கொண்டாள். சகிக்க முடியாமற் போனதும் ஒரேயடியாக விடை பெற்றுக் கொண்டு போய் விட்டாள். ஹமீத் இப்பொழுது கிழப் பாட்டி அமீனாவின் மடியில் படுத்துறங்கினான். சந்தோஷமாகவேயிருந்தான். அவனுடைய அப்பா பணம் சம்பாதிக்கப் போயிருக்கிறார். மூட்டை மூட்டையாய்க் கட்டிக் கொண்டு



வரப்போகிறார். அம்மாவோ அவனுக்காக விளையாட்டு சாமான்களும், தின்பண்டங்களும் கொண்டு வர அல்லாமியானிடம் போயிருக்கிறாள். ஹமீதின் களிப்பிற்கு போதாதா காரணம்?

நம்பிக்கை மிகவும் பெரிய விஷயம் – குழந்தையின் நம்பிக்கை என்றால் கேட்கவும் வேண்டுமா! கடுகை மலையாய் வளர்க்கும் சக்தி உண்டு அந்தக் கபடமற்ற நம்பிக்கைக்கு. ஹமீதின் காலில் செருப்பில்லை, தலையில் ஒரு பழைய அழுக்குக் குல்லா – ஆனாலும் அவன் குஷாலாயிருந்தான். அப்பா பண மூட்டைகளுடனும், அம்மா நிறைய பரிசுப் பொருள்களுடனும் வரும் பொழுது அவன் தன் விருப்பங்களை எல்லாம் நிறை வேற்றிக் கொள்ளுவான். மஹபூத், நூர், மோஹஸின், ஷம்மி, எல்லோரையும் பார்த்துக் கொக்கரிப்பான்!

ஏழை அமீனா தன் குடிசையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். அந்த நன்னாளில் கூட அவள் வீட்டில் ஒன்றுமேயில்லை. பிள்ளை ஆபித் உயிருடன்



இருந்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா? துக்கமும் ஏமாற்றமும் அவளை அழுத்தின. ஈத் ஏன் தான் வருகிறதோ? – யார் வருந்தி அழைத்தார்கள் அதை? இந்த வீட்டில் அதற்கு இடமேயில்லை. ஆனால் ஹமீத்? யார் இருந்தாலென்ன, யார் இறந்தாலென்ன – அவனுள் நம்பிக்கை ஒளிவிட்டுப் பிரகாசித்தது.

ஹமீத் பாட்டிக்கு ஆறுதல் கூறினான். "பயப்படாதே பாட்டி. நான் எல்லோருக்கும் முன்னேயே திரும்பி வந்து விடுவேன். கொஞ்சமும் பயப்படாதே" அமீனாவிற்கு நெஞ்சைப் பிழிந்தெடுத்தது துக்கம். கிராமத்துப் பிள்ளைகள் எல்லோரும் அவரவர்களுடைய தந்தையுடன் போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர். ஹமீதிற்கு அமீனா தானே எல்லாம்! அவனை எப்படித் தனியாய்ப் போக விடுவது? பச்சிளங் குழந்தை எங்கேயாவது தொலைந்து போய் விட்டால்? மேலும் இரண்டு மைல் நடக்க முடியுமா அவனால்? செருப்புக் கூட இல்லை அவன் காலில் – பாதம் கொப்பளித்துப் போகுமே. அவனைத் தன் இடுப்பில் தூக்கிக் கொண்டு போகலாமா என்று யோசித்தாள். ஆனால் வீட்டில் ஹல்வா தயாரிப்பது யார்? பணம் இருந்தால் எல்லா சாமான்களையும் வாங்கித் தயாராய் வைத்து விட்டு அவனுடன் போய் வரலாம். திரும்பி வந்து சட்பட் என்று சேமியா ஹல்வாவைக் கிளறி விடலாம். ஆனால் சாமான்களைச் சேகரித்து வைக்கவே நிறைய நாழியாகும். அன்று ஒரு நாள் ஃபோமனின் துணிகளைத் தைத்துக் கொடுத்ததற்கு எட்டணா கிடைத்தது. அதை ஈத் கொண்டாடுவதற்கென்று பத்திரமாய் வைத்திருந்தாள். ஆனால் பழைய பாக்கிக்காக பால்காரி செய்த அட்டகாசத்திற்குப் பயந்து அவளுடைய கணக்கைத் தீர்க்க வேண்டி வந்தது. இப்பொழுது மிஞ்சியிருந்தது இரண்டே அணா! அதில் மூன்று



பைசா ஹமீதின பையிலிருந்தது - பாக்கி ஐந்து பைசா அவளுடைய சுருக்குப பையில். அவ்வளவுதான் மொத்த ஐசுவரியம் - அதில் ஈத் கொண்டாடியாக வேண்டும். "அல்லா தான் வழிகாட்ட வேண்டும். வண்ணாத்தி, முடி வெட்டுகிறவள், தெருக்கூட்டுபவள், வளைக்காரி, எல்லோரும் சேமியாவிற்காக வந்து விடுவார்கள். கொஞ்சமாய்க் கொடுத்தால் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு வஞ்சனை செய்ய முடியாது - செய்யவும் கூடாது. வருடத்தில் ஒரு முறை வரும் பண்டிகை - அதைக் கொண்டாடுவதில் கஞ்சத்தனம் கூடாது. அல்லா வழி காட்டுவார் - எல்லாம் நல்லபடியாக நடக்கும். குழந்தை நன்றாயிருக்கட்டும் - அல்லாவின் கிருபை அவன்பால் பூர்ணமாயிருக்கட்டும் - அது போதும்" அமீனாவின் மனம் நிலையற்றுத் தவித்தது.

கிராமத்திலிருந்து ஊர்வலம் போல் புறப்பட்டனர் பெரியோரும் சிறியோரும். ஹமீதும் பிற சிறுவர்களுடன் சென்றான். ஓட்டமும் நடையுமாய், உல்லாசமும் களிப்புமாய், குழந்தைகள் முன்னேறினார்கள். பெரியவர்கள் அவசரப்படாமல் சாவகாசமாய் நடந்து வந்தது அவர்களுடைய பொறுமையை வெகுவாய்ச் சோதித்தது. கால்களில் சிறகு முளைத்து விட்டதைப் போல் பறந்தான் ஹமீத். அவனா களைப்பவன்?

ஊர் நெருங்கிக் கொண்டிருந்தது. சாலையின் இரு புறமும் பெரிய பெரிய தோட்டங்கள் - நாலு புறமும் கற்சுவரால் சூழப்பட்ட தோட்டங்கள். மாங்கனியும், லீச்சியும் காய்த்துத் தொங்கின. நடுநடுவே பையன்கள் அக்கனிகளைக் குறிவைத்துக் கல் அடித்தனர். தோட்டக்காரன் கத்திக் கொண்டே வெளியே வருவதற்குள் அவர்கள் காற்றாய்ப் பறந்து தூரத்திலிருந்து அவனைக் கேலி செய்து கும்மாளமடித்தனர்.



பெரிய பெரிய கட்டிடங்கள் தென்படலாயின – ஹைகோர்ட், காலேஜ், கிளப் – – இவ்வளவு பெரிய காலேஜில் எத்தனை பிள்ளைகள் படிப்பார்களோ? பிள்ளை என்று சொல்லமுடியாது எல்லோரையும். மீசை வளர்ந்த பெரியவர்களும் மாணவர்களுள் இருந்தனர். இவ்வளவு வயதான பிறகுமா படித்துக் கொண்டிருப்பார்கள்? எப்பொழுது தான் இவர்கள் படிப்பு முடியுமோ – இவ்வளவு படித்துவிட்டு என்ன செய்வார்களோ! ஹமீதின் மதரஸாவிலும் பெரிய பெரிய பிள்ளைகள் இரண்டு மூன்று பேர் இருந்தனர் – அவர்களுக்குப் படிப்பில் அக்கறையே இல்லை; வாத்தியாரிடமிருந்து அடி வாங்காத நாளேயில்லை. இந்தக் காலேஜில் படிப்பவர்களும் அப்படிப் பட்டவர்களாய்த் தானிருப்பார்கள் – வேறென்ன? கிளப் வந்து விட்டது. அங்கு மந்திரவாதம், செப்பிடுவித்தை எல்லாம் நடக்குமாம் – சவக்கூடுகள் ஓடி ஆடுமாம் – என்னென்னவோ கேளிக்கைகள். ஆனால் வெளி மனிதர்கள் அங்கு நுழைய முடியாது. மாலையில் துரைகள் அங்கு ஏதேதோ விளையாடுவார்களாம். தாடியும், மீசையும் முளைத்தவர்களுக்கு விளையாட்டென்ன விளையாட்டு! துரைகளின் மனைவிகளும் விளையாடுவர்களாம் – ஆமாம் நிசமாய்! அவர்கள் கையில் பிடித்து விளையாடுகிறார்களே மட்டை (பாட்), அதைப் பாட்டி கையில் கொடுத்தால் அவளுக்கு அதைப் பிடித்துக் கொள்ளக் கூடத் தெரியாது.

“என் அம்மா ஜானுக்குக் கைநடுங்க ஆரம்பித்து விடும் அல்லாமேல் ஆணை” என்றான் மஹபூத்.

“என் அம்மா ஒரு மணங்கு மாவைக் கூட பிசைந்து வைப்பாள். ஆனால் அந்த ‘பாட்’டை அவளால் பிடித்துக் கொள்ள முடியாது, கை நடுங்கும். தினம் குடங்குடமாய் தண்ணீர் இழுக்கிறாள். என் எருமையே ஐந்து குடம் குடிக்கிறது. இந்தச் சீமாட்டிகள் யாராலாவது ஒரு குடம் கூட இறைக்க முடியுமா என்ன? கண்ணை இருட்டிக் கொண்டு வருமே” என்றான் மோஹஸின்.

“ஆனால் உன் அம்மாவால் ஓட முடியாதே – குதித்து ஆடவும் முடியாது” என்றான் மஹபூத்.

மோஹஸின் ஒப்புக் கொண்டான் “குதித்து விளையாட முடியாது, நிசம் தான். ஆனால் அன்று என் பசு அறுத்துக் கொண்டு செளதரியின் வயலை நோக்கிப் பாய்ந்த பொழுது அதைப் பிடிக்க என் அம்மா ஓடினதைப் பார்க்க வேண்டும்! என்னால் அவளுடன் ஓடமுடியவில்லை!”

மேலே நடந்தனர். அதோ மிட்டாய்க் கடைகள் வந்து விட்டன – ரொம்ப அலங்காரமாய் இருந்தன. குவிந்து கிடந்தன மிட்டாய்கள் – யார் தான் சாப்பிடுவார்களோ இவ்வளவையும்? இரவில் ஒரு பூதம் வந்து எல்லாவற்றையும் வாங்கி விடுமாம்.

“நடு இரவில் யாரோ ஒருவன் ஒவ்வொரு கடையாய்ப் போய் மிஞ்சியிருக்கும் தின்பண்டங்களை நிறுத்து, நிஜமான ரூபாயைக் கொடுத்து வாங்குவானாம் – நிஜமான ரூபாய், தெரியுமா? அப்பாதான் சொன்னார்” ஹமீதிற்கு நம்பிக்கைப் படவில்லை. “நிஜ ரூபாய் பூதத்திற்கு எப்படி கிடைக்க முடியும்”?





"பூதத்திற்குப் பணமா கிடைக்காது? எந்தக் கஜானாவிற்குப் போனாலும் போதுமே - இரும்புக் கதவுகள் தானாகத் திறந்து வழிவிடும். உனக்கு இது கூடவா தெரியாது? அதனிடம் வைரமும் பொன்னும் குவிந்து கிடக்கும். பிடித்தவர்களுக்கு வாரிக் கொடுக்கும். இங்கே இப்பொழுது இருக்கும்; ஐந்து நிமிடத்திற்குள் கல்கத்தாவிற்குப் போய்விடும்" என்று அளந்தான் மோஹஸின். "பூதம் ரொம்பப் பெரிசாயிருக்கும் அல்லவா" ஹமீத் கேட்டான். "ஒவ்வொன்று ஆகாசத்தைத் தொடும் தெரியுமா? தரையில் கால், தலை ஆகாசத்தில்; அதுவே ஒரு சிறு செம்பிற்குள்ளும் புகுந்து விடமுடியும்" என்று விளக்கினான் மோஹஸின்.

"பூதத்தைச் சந்தோஷப் படுத்துவது எப்படி? அந்த வித்தையை யாராவது எனக்குச் சொல்லிக் கொடுத்தால் ஒரு பூதத்தை வசப்படுத்திக் கொள்ளுவேன்" என்று ஆசைப்பட்டான் ஹமீத்.

"எனக்குத் தெரியாது எந்த மந்திரமும். ஆனால் சௌதரி சாஹப் நிறையப் பூதங்களை வசப்படுத்தி வைத்திருக்கிறார்! எங்கேயாவது திருட்டு நடந்தால் சௌதரி சாஹப் திருடனுடைய பெயர் முதற்கொண்டு சொல்லிவிடுவார். அன்று ஜீமராதியின் கன்று காணாமற் போய் விட்டதே, நினைவில்லை? மூன்று நாள் வரை எவ்வளவோ தேடியும் அகப்படவில்லை. அப்புறம் சௌதரியிடம் ஓடினான் - ஒரே நிமிடத்தில்



அவர் சொல்லிவிட்டார். கன்று பவுண்டில் இருப்பதாக. அங்கு தான் இருந்தது அது. பூதம் தான் அவருக்கு ஊர் சமாசாரமெல்லாம் சொல்லுகிறது" என்றான் மோஹஸின்.

சௌதரியிடம் அவ்வளவு பணம் இருப்பதற்குக் காரணம் புரிந்துவிட்டது ஹமீதிற்கு. பூதத்தின் பலத்தால்தான் அவருக்கு மரியாதையும் கிட்டியது.

சிறுவர்கள் வேகமாய் நடந்தனர். இதோ போலீஸ் லைனும் வந்துவிட்டது. சிப்பாய்கள் அணி வகுத்து நடந்து கொண்டிருந்தனர் - ரைட்டர்ன்! ஃபார்ம் ஃபோர்! இரவெல்லாம் தூங்காமல் இவர்கள் காவல் காத்தனர் - அதனால் தான் திருடர்கள் பயந்து போகிறார்கள். மோஹஸின் ஒத்துக் கொள்ளவில்லை. "இந்தச் சிப்பாய்களா காவல் காக்கிறவர்கள்? உனக்கு என்ன தெரியும்? இவர்கள் தான் திருட்டுக்களை நடத்துகிறவர்கள் - தெரியுமா சேதி? திருடர்களெல்லோரும் இவர்களுடைய கூட்டாளிகள். இரவில் திருடர்களை ஒரு புறம் திருட அனுப்பிவிட்டு, ஊரின் மறு புறத்தில் பெரிதாய் காவல் காப்பார்கள் - "தூங்காதீர்கள், விழித்திருங்கள்" என்று ஆரவாரம் செய்தவாறு. இவர்களிடம் பணம் கொட்டிக் கிடக்கிறது. என் மாமா ஒரு கான்ஸ்டபில் - மாதம் இருபது ரூபாய் சம்பளம். ஆனால் ஊருக்கு மாதாமாதம் ஐம்பது ரூபாய் அனுப்புகிறார் - அல்லாமேல் ஆணை. நான் ஒரு முறை கேட்டே விட்டேன் "மாமா, ஏது உன்னிடம் இவ்வளவு பணம்?" என்று. சிரித்துக் கொண்டே "தம்பி, அல்லா தருகிறார்" என்றார். அப்புறம் தானாகவே "வேணுமானால் நாங்கள் லட்சலட்சமாய்ச் சம்பாதிக்கலாம். ஆனால் நான் கணக்காய்த் தான் எடுத்துக் கொள்ளுகிறேன் - பெயரும் கெடாது, வேலைக்கும் ஆபத்தில்லை" என்றார்.




"திருட்டுக் குற்றத்திற்காக இவர்களை யாராலும் பிடித்துத் தண்டிக்க முடியாதா"?

அப்பாவி ஹமீதைப் பார்த்துப் பரிதாபப் பட்டான் மோஹஸின். "அட பைத்தியமே! அவர்களை யார் பிடிப்பார்களாம்? திருடர்களைப் பிடிப்பது அவர்களுடைய வேலை அல்லவா? ஆனால் அல்லா அவர்களைத் தண்டித்து விடுகிறார். கெட்ட வழியில் வரும் பணம் தங்காது. திருட்டுப் பணம் நாசமாய்விடும். இதோ கொஞ்ச நாள் முன்புதான் மாமாவின் வீட்டில் நெருப்புப் பற்றிக் கொண்டது. எல்லாம் எரிந்து போய்விட்டது. பாத்திரம் பண்டங்கள் கூட மிஞ்சவில்லை. எத்தனையோ நாள் வரையில் அவர்கள் மர நிழலில் விழுந்து கிடந்தனர். நிசமாச்சொல்லுகிறேன் – மரத்தின் அடியிலேயே படுத்துக் கிடந்தனர். அல்லா மேல் ஆணை. அப்புறம் எங்கிருந்தோ நூறு ரூபாய் கடன் வாங்கிப் பாத்திரம் பண்டம் வாங்கினார்கள்."

"நூறு ஐம்பதை விட அதிகமா"? அசட்டு ஹமீத் கேட்டான் "ஐம்பது எங்கே, நூறு எங்கே! ஐம்பது ஒரு பை நிறையும். நூறு இரண்டு பைக்குள் கூட அடங்காது"


ஜனத்திரள் அதிகமாகிக் கொண்டிருந்தது – ஈத்காஹ் போவோர்களின் திரள். கண்ணைப் பறிக்கும் அலங்காரங்களுடன் இக்கா, டாங்கா, மோட்டார், ஆகியவற்றில் போய்க் கொண்டிருந்தனர். எங்கும் குதூகலம் அலை பாய்ந்தது. எல்லோருமே ஆகாசத்தில் பறந்தனர். கிராமக் கும்பலும் தங்கள் ஏழ்மையை மறந்து சந்தோஷமும் உற்சாகமும் பொங்கப் போய்க் கொண்டிருந்தது. பட்டணக் காட்சிகள் எல்லாமே அதிசயமாயிருந்தன குழந்தைகளுக்கு. கண் கொட்டாமல், திறந்த வாய் மூடாமல்



எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு, பின்னால் ஒலிக்கும் கார்ஹார்னுக்கும் ஒதுங்காமல் அங்குமிங்கும் நின்றனர். ஹமீத் கார் அடியில் அறைபடாமல் மயிரிழையில் தப்பினான்.

திடீரென்று ஈத்காஹ் கண்முன் தோன்றியது; புளியமர நிழலின் கீழ் சிமெண்டு தரை; அதன் மேல் ஜமுக்காளம். கும்பல் கும்பலாய் விரதமிருந்தவர்களும் விரதமிருக்காதவர்களும் வந்தவாறிருந்தனர். விரிப்பின் எல்லையையும் தாண்டி மண் தரையிலும் கூட்டம் நிரம்பி வழிந்தது. மேன்மேலும் வந்து கொண்டிருந்த ஜனங்கள் பின் பக்கம் போய் நின்று கொண்டனர். இங்கு பணமோ அந்தஸ்தோ எடுபடவில்லை. இஸ்லாமின் முன் எல்லோரும் சமம். கிராமக் குழுவும் வணங்கிவிட்டுப் பின் வரிசையில் போய் நின்று கொண்டது. ஏற்பாடுகள் ரொம்பவும் மேன்மையாயிருந்தன. லட்சக் கணக்கான தலைகள் ஒன்றாய்க் குனிந்து தாழ்ந்தன. பிறகு எல்லோரும் ஒன்றாய் எழுந்து நின்றனர்; ஒன்றாய்க் குனிந்தனர், ஒருமிக்க மண்டியிட்டு அமர்ந்தனர். இந்தக் கிரமம் அநேகம் முறை நடந்தது - ஏராளமான மின்சார விளக்குகள் ஒன்றாய் ஒளி வீசி விட்டு, ஒன்றாய் அணைவதைப் போல். பக்தர்கள் திரும்பத் திரும்ப குனிந்து நிமிர்ந்தனர் — அல்லாவின் பெரும் கருணையை வேண்டி.


நமாஜ் முடிந்துவிட்டது. மக்கள் ஒருவரை ஒருவர் தழுவி வாழ்த்திக் கொண்டனர். பிறகு கடைகளை நோக்கிப் பாய்ந்தனர். பெரியோரும் சிறியோரும் சமமாய் உற்சாகம் காட்டினர். திருவிழா மைதானத்தில் ஜேஜே என்று கூட்டம் நெரிந்தது. ரங்க ராட்டினக் குதிரை, மரயானை, ஒட்டகம் முதலியவைகளில் எல்லோரும் ஏறிச் சுற்றினர். ஒரு பைசாவிற்கு 25 முறை சுற்றலாம். மஹ்மூதும், மோஹஸினும், நூரும், ஸமீயும் ஒவ்வொரு பைசா கொடுத்துவிட்டு ஏறிக் கொண்டனர். ஹமீத் தூர நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அவனிடம் இருந்தது மூன்றே பைசா. அந்தப் பொக்கிஷத்தின் மூன்றிலொரு பங்கை ராட்டினம் சுற்றச் செலவிட முடியாது அவனால். எல்லோரும் இறங்கி விட்டனர். பொம்மை வாங்க வேண்டும் இனிமேல். வரிசை வரிசையாய்க் கண்ணைப் பறிக்கும் பொம்மைக் கடைகள் - விதம் விதமான பொம்மைகள்! சிப்பாய், ராஜா, வக்கீல், தண்ணீர்க் காரன், வண்ணான் - இன்னும் எவ்வளவோ. என்ன அழகு! முகத்தில் என்ன களை! காக்கி உடுப்பும் சிகப்புத் தலைப்பாகையும் அணிந்து, தோளில் துப்பாக்கி ஏந்தி நின்ற சிப்பாயை எடுத்துக்







கொண்டான் மஹமூத். அணிவகுப்புக்குக் கிளம்பு வதைப் போலத் தத்ரூபமாய் இருந்தது அந்தப் பொம்மை. மோஹஸினிற்குத் தண்ணீர் காரன் தான் பிடித்தது. வளைந்த முதுகில் தண்ணீர்ப்பையை ஏந்திச் சிரித்தவாறு நின்றது அந்தப் பொம்மை. அதனிடம் கைஏந்தித் தண்ணீர் வாங்கிக் குடிக்கத் தோன்றியது. நூர் வக்கீலைப் பொறுக்கிக் கொண்டான். அதன் முகத்தில் தான் எவ்வளவு அறிவுக்களை! வக்கீலின் மேலே கறுப்பு கௌன். ஜேபியி லிருந்து தொங்கியது பொன் சங்கிலியுடன் கடியாரம்; கை நிறைய சட்டப் புத்தகங்கள். எல்லாம் தத்ரூபமாயிருந்தது. இதோ கோர்ட் டுக்குப் புறப்பட்டு விட்டார் வக்கீல் ஐயா!





இவை எல்லாமே இரண்டிரண்டு பைசா பொம்மைகள். ஹமீதின் கையிருப்பு மூன்று பைசா தானே – இரண்டு பைசா கொடுத்து பொம்மை வாங்க முடியுமா அவனால்? மேலும் கை தவறினால் மண் பொம்மை சுக்கு நூறாய் விடும் – ஈரம் பட்டால் சாயம் கரைந்து விடும். இவ்வளவு மட்டமான பொம்மை வேண்டவே வேண்டாம் அவனுக்கு.

“என் தண்ணீர்க்காரன் தினம் இருவேளையும் வீட்டிற்கு வேண்டிய தண்ணீரைக் கொட்டி விட்டுப் போவான்” என்றான் மோஹஸின்.

“என் சிப்பாய் வீட்டிற்கு முன் காவல் காப்பான். திருடன் யாராவது வந்தால் சுட்டுத் தள்ளிவிடுவான்” மஹமூத் வீரம் பேசினான்.

“என் வக்கீல் எப்படி வாதாடுவார் தெரியுமா?” என்று பெருமை பேசினான் நூர்.

“என் வண்ணான் தினம் துணி துவைத்துத் தருவான்” என்றான் ஸமீ

ஹமீத் பொம்மைகளைத் தூற்றினான். “வெறும் மண் தானே – விழுந்தால் சுக்கு நூறு” ஆனால் ஆசையுடன் அவைகளைப் பார்த்தவாறு நின்றான். கொஞ்ச நேரமாவது



அவைகளைத் தொட்டு விளையாட ஆசைப்பட்டான். அவன் கை அவைகளைத் தொட நீண்டது. ஆனால் மற்றச் சிறுவர்கள் விட்டுக் கொடுப்பார்களா? அதுவும் புது மோகத்தை! ஹமீதின் ஆசைதான் மிஞ்சியது.

பொம்மை ஆச்சு, இனிமேல் மிட்டாய். ஒருவன் எள்ளு மிட்டாய் (ரேவடி) வாங்கிக் கொண்டான். மற்றொருவன் குலாப்ஜாமுன் - மூன்றாமவன் ஸோஹன் ஹல்வா. எல்லோரும் சப்புக் கொட்டிக் கொண்டு தின்றனர் தங்கள் தங்கள் பங்கை. ஹமீத் பாவம் மூன்று பைசா இருந்ததே அவனிடம் - ஏதாவது வாங்கிச் சாப்பிடக் கூடாதா அவனும்? ஆசையுடன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு நிற்பானேன்?



"ஹமீத், இந்தா ரேவடி. என்ன வாசனை பார்" என்றழைத்தான் மோஹஸின். இது குரூர விளையாட்டாயிருக்குமோ என்று ஒரு கணம் யோசித்தான் ஹமீத் - மோஹஸின் அவ்வளவு தாராளமாய் இருக்க முடியுமா? ஆனால் ஆசை தூண்டிற்று. மோஹஸின் ஒரு துண்டை ஹமீத் பக்கமாய் நீட்டினான். ஹமீத் அதை வாங்கிக் கொள்ளக் கை எடுத்தான். அதற்குள் அந்த துஷ்டப் பிள்ளை அதைத் தன் வாயில் போட்டுக் கொண்டு விட்டான். எல்லோரும் கை தட்டி எக்களித்தனர். பாவம் ஹமீத்; ஏமாற்றத்தினால் குறுகிப் போனான்.



திரும்ப மோஹஸின் அவனுக்கு ஆசை காட்டினான் - "கட்டாயம் தருவேன் இந்தத் தடவை - அல்லா மேல் ஆணை - இதை எடுத்துக் கொள்"

"நீயே வைத்துக் கொள் உன் மிட்டாயை. என்னிடம் பைசா இல்லையா என்ன?"

"மூன்றே மூன்று பைசா தானே! அதில் என்னென்ன வாங்க முடியும் உன்னால்"? ஸமீ கேலி செய்தான்.

"நான் குலாப் ஜாமுன் தருகிறேன் - இந்தா ஹமீத், மோஹஸின் ஒரு பத்மாஷ்" மஹமூத் அழைத்தான்.

ஹமீத் அசையவில்லை "மிட்டாய் என்ன அவ்வளவு விசேஷம்? அது உடம்பிற்குக் கெடுதல் என்று படித்ததில்லை நீ?"

"ஆனால் கிடைத்தால் விடமாட்டாய் அல்லவா? உன் பைசாவை செலவு செய்யேன்" மோஹஸின் மேலும் தூண்டினான்.

"எனக்குத் தெரியும் அவனுடைய தந்திரம். நம் பைசாவெல்லாம் செலவாய்விட்ட பிறகு அவன் மட்டும் நமக்கு ஆசை காட்டிக் காட்டி மிட்டாய் தின்னுவான்-பார்" மஹமூத் விளக்கினான்.

மிட்டாய்க் கடைகளுக்குப் பிறகு இரும்பு சாமான் கடைகளும், கில்ட் நகைக் கடைகளும். அங்கு சிறுவர்களுக்கு வேலையில்லை. எல்லோரும் அந்தக் கடைகளைத் தாண்டிக் கொண்டு மேலே நடந்தனர். ஆனால் ஹமீத் மட்டும் இரும்புக் கடையிடம் நின்று விட்டான். வரிசை வரிசையாய் சிம்டாக்கள் (இடுக்கி) வைக்கப்பட்டிருந்தன. அவனுக்கு உடனே பாட்டியின் நினைவு வந்தது. அவளிடம் சிம்டா இல்லை. கல்லிலிருந்து சப்பாத்தியை எடுக்கும் பொழுது தினம் விரல்களைச் சுட்டுக் கொள்கிறாள். சிம்டா ஒன்று வாங்கி அவளுக்குக் கொடுத்தால் எவ்வளவு சந்தோஷப் படுவாள் அவள்! அப்புறம் அவள் விரல்கள் ஒரு போதும் சுடாது. உபயோகமான சாமான் அது. பொம்மையால் என்ன பிரயோசனம்? வீண் செலவு - அதுவும் சொற்ப காலக்களிப்பிற்காக. அப்புறம் பொம்மை ஒரு மூலையில் விழுந்து கிடக்கும் கவனிப்பாரற்று. வீடு போய்ச் சேருவதற்கு முன்பே கைதவறி விழுந்து மண்ணோடு மண்ணாய்ப் போனாலும் போகலாம். சிம்டா அப்படியில்லையே - எப்போதும் உபயோகப்படும் - சப்பாத்தியைக் கல்லிலிருந்து தூக்கி நெருப்பிலிட்டுச் சுட உதவும், யாராவது கனல் கேட்டால் உடனே சிம்டாவால் எடுத்துக் கொடுக்க உதவும். பாட்டிற்கு எங்கே ஒழிவு கடைக்கு வர - பணம் தான் ஏது அவளிடம்? பாவம் தினம் கையைச் சுட்டுக் கொள்கிறாள்.

ஹமீதின் கூட்டாளிகள் வெகு தூரம் சென்றுவிட்டனர். எல்லோரும் ஷர்பத் உறிஞ்சிக் கொண்டிருந்தனர். என்ன பேராசை பிடித்த கூட்டம் - எவ்வளவு மிட்டாய் வாங்கினார்கள். ஆனால் ஒரு துண்டு கூட அவனுக்குத் தரவில்லை. "என்னுடன் விளையாடு, அதைச் செய், இதைச் செய்" என்று அதிகாரம் வேறு. இனிமேல் யாராவது என்னை ஏவினால் தெரியும் சேதி. பேராசை பிடித்தவர்கள். யாருக்கும் தராமல் மிட்டாய் தின்கிறார்களே, வாய் அழுகிப்போகும். உடம்பெல்லாம் கட்டி புறப்படும். தீனிக்கொதி வளர வளர பணம் திருடிப் பண்டம் வாங்கவும்

தொடங்குவார்கள் - நல்ல உதையும் வாங்கிக் கொள்ளுவார்கள். புத்தகத்தில் எழுதியிருப்பது பொய்யா என்ன? எனக் கென்ன! சிம்டாவைக் கண்டவுடன் பாட்டி ஓடி வந்து என்னிடமிருந்து அதை வாங்கிக் கொள்ளுவாள். "என் குழந்தை எனக்காகச் சிம்டா வாங்கி வந்திருக்கிறான்" என்று மகிழ்ந்து போவாள். ஆயிரமாயிரம் தரம் ஆசீர்வாதம் செய்வாள். அப்புறம் அக்கம் பக்கத்தவருக்கு காண்பித்துப் பெருமை பட்டுக் கொள்ளுவாள். கிராமத்தில் எங்கும் அதே பேச்சாயிருக்கும் - "ஹமீத் தன் பாட்டிக்காக சிம்டா வாங்கி வந்திருக்கிறான். எவ்வளவு நல்ல பையன்" என்று. இவர்களுடைய பொம்மைகளை யார் கவனிப்பார்கள், யார் இவர்களை ஆசீர்வதிப்பார்கள்? பெரியோருடைய ஆசீர்வாதம் நேரே அல்லாவின் தர்பாருக்குப்







போய்சேரும் - உடனே பலனும் கிட்டும். என்னிடம் பணமில்லை. அதனாலல்லவா மோஹஸினும் மஹமூதும் என்னை அவமானப்படுத்துகிறார்கள்! பொம்மையை வைத்துக் கொள்ளட்டும் அவர்களே! மிட்டாயையும் அவர்களே தின்னட்டும். எனக்கு ஒன்றும் வேண்டாம். அவர்களிடம் ஏச்சுக் கேட்பானேன் நான்? நான் ஏழை தான் - ஆனால் நான் யாரிடமும் யாசிக்கப் போகவில்லையே. எப்பவாவது அப்பாஜான் வரத்தான் போகிறார். அம்மாவும் வருவாள். அப்புறம்பார் என்ன செய்கிறேன் என்று. "எவ்வளவு பொம்மை வேண்டும்" என்று இவர்களை அலட்சியமாய் கேட்பேன். கூடை நிறையப் பொம்மை ஒவ்வொருவனுக்கும் கொடுப்பேன். நண்பர்களிடம் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று செய்து காண்பிப்பேன். ஒரு ரேவடி துண்டை வைத்துக் கொண்டு ஆசை காட்டி மோசம் செய்வதா சிநேகம்? என் சிம்டாவைப் பார்த்து எல்லோரும் சிரிப்பார்கள். ஆனால் எனக்கென்ன?" பிஞ்சு மனம் குமுறியது.

கடைக்காரனை அணுகி, "இந்த சிம்டா என்ன விலை?" என்றான். சிறுவனுடன் வேறு வயதானவர்கள் எவரும் இல்லாததைக் கண்டு, கடைக்காரன், "இது உனக்கு உபயோகப் படாது" என்றான்.

"விற்பனைக்குத் தானே?"

"விற்பனைக்கில்லாவிட்டால் இங்கு சுமந்து வருவானேன்?"

"அப்போ விலை என்ன சொல்"

“ஆறு பைசா” என்றான் கடைக்காரன்.

ஹமீதிற்கு திக் என்றது. “சரியான விலை சொல்லைய்யா” என்றான்.

“ஐந்து பைசாவிற்குக் குறையாது. வேண்டுமென்றால் வாங்கு. இல்லா விட்டால் போ” கறாராய்ப் பேசினான் கடைக்காரன்.

தன் தைரியத்தை எல்லாம் திரட்டிக் கொண்டு “மூன்று பைசாவிற்குத் தருவாயா?” என்றான் ஹமீத். பேசிக் கொண்டே நடக்க ஆரம்பித்தான் - கடைக்காரனின் மிரட்டலைக் கேட்காமலிருக்க. ஆனால் கடைக்காரன் மிரட்டவில்லை. அவனைக் கூப்பிட்டு மூன்று பைசாவை வாங்கிக் கொண்டு சிம்டாவைக் கொடுத்து விட்டான். அதைத் தன் தோள் மேல் துப்பாக்கியைப் போல் வைத்துக் கொண்டு பெருமையாய்த் தன் கூட்டாளிகளை நோக்கி நடந்தான் ஹமீத், அவர்களுடைய கேலியையும் ஏச்சுப் பேச்சுகளையும் கேட்கத் தயாராய் நின்றான்.



முதலில் மோஹஸின் தான் கேலியாகச் சிரித்தபடி "இந்த சிம்டா எதற்கு, அசடே? என்ன செய்வாய் இதை வைத்துக் கொண்டு?" என்றான். ஹமீத் சிம்டாவை தரையில் எறிந்த படி, "உன் தண்ணீர்க்காரனை கொஞ்சம் அப்படி போடு பார்க்கலாம். எலும்பு நொறுங்கிப் போகாதா அவனுக்கு!" என்று சவால் விட்டான்.

"இந்தச் சிம்டா ஒரு விளையட்டு சாமானா என்ன?" என்று மஹபூத் வினவினான்.

"ஏனில்லை? இதோபார் - தோளில் வைத்துக் கொண்டால் துப்பாக்கி, கையில் சிம்டா; மஜீராவாகவும் உபயோகிக்கலாம். அதால் ஒரு அடி வைத்தேனானால் உங்கள் பொம்மை எல்லாம் அதோகதி தான். அவை எல்லாம் ஒன்று சேர்ந்து பலம் போட்டால் கூட என் சிம்டாவின் மயிரிழை அசையாது. என் சிம்டா சிங்கமாக்கும் சிங்கம்."



ஸமீதன் தப்பட்டையை திட்டியவாறு "இதை வைத்துக் கொண்டு சிம்டாவைத் தரியா எனக்கு? இந்தத் தப்பட்டையின் விலை இரண்டு அணா" என்று வியாபாரம் ஆரம்பித்தான்.

ஹமீத் அந்தத் தப்பட்டையை அலட்சியமாய்ப் பார்த்தவாறு, "என் சிம்டா விரும்பினால் உன் தப்பட்டையின் வயிற்றை கிழித்து விடும் தெரியுமா? அது - டப் டப் என்று ஓசை செய்யும் தோல். கொஞ்சம் ஈரம் பட்டால் அதன் பாடு முடிந்து போகும். என் வீரன் சிம்டா இருக்கிறதே - நெருப்பானாலும் சரி, வெள்ளமானாலும் சரி, புயலானாலும் சரி கொஞ்சம்கூட அசைந்து கொடுக்காது - தெரியுமா?"

சிம்டா மோகம் எல்லோரையும் பிடித்துக் கொண்டது. ஆனால் பணம் யாரிடமும் இல்லை. சந்தையை விட்டு வெகு தூரம் வந்து விட்டார்கள். மேலும் நாழியாகி விட்டது. வெயில் சுரீர் என்று சுட்டது. எல்லோருக்கும் வீட்டிற்குப் போகும் அவசரம். அப்பாஜானிடம் பிடிவாதம் பிடித்தாலும் சிம்டா கிடைக்காது. ஹமீத் பெரிய தந்திரசாலிதான் - கடைசிவரை தன் பைசாவை மிச்சப்படுத்தி வைத்திருந்தானே!

சிறுவர்கள் இரு பாகமாகப் பிரிந்தனர், ஹமீத் தனி. மற்றெல்லோரும் ஒரு கட்சி.

மோஹஸின், "உன் சிம்டாவால் தண்ணீர் நிரப்பிக் கொட்டமுடியாதே" என்று கேலி செய்தான்.

ஹமீத் சிம்டாவைத் தரையில் நிறுத்தியவாறு "இது ஒரு மிரட்டல் போட்டால் போதும் - தண்ணீர்க்காரன் ஓடி வந்து வீட்டு வாசலில் தண்ணீர் தெளிக்க மாட்டானா என்ன?" என்றான்.

மோஹஸின் தோற்றுப் போனான். மஹமூத் விடாமல் "நீ ஏதாவது குற்றத்திற்குப் பிடிபட்டுவிட்டால் கைதியாகத்தானிருக்க வேண்டும். வக்கீலின் காலில் வந்து விழுந்தால் தான் விமோசனம்" என்றான். ஹமீதால் இதற்கு சரியாய்ப் பதில் சொல்ல முடியவில்லை. "என்னை யார் பிடிப்பார்கள்?" என்று கேட்டு நிறுத்திக் கொண்டான்.

"என் சிப்பாயிடம் துப்பாக்கியிருக்கிறது" மஹமூத் அகம்பாவமாய்ச் சொன்னான். ஹமீத் முகத்தை வலித்தபடி "பாவம். அதுவா என் வீரன் "ருஸ்தமே ஹிந்தை"ப் பிடிக்கும்? கொண்டு வா, பார்க்கலாம் குஸ்தி நடத்தி. என் சிம்டாவைப் பார்த்து தூர ஓடுமே உன் சிப்பாய் - பிடிக்கப் போறானாம் பிடிக்க!" மோஹஸினிற்குப் புதிய ஒரு ஏச்சுத் தோன்றியது. "உன் சிம்டாவின் முகம் தினம் நெருப்பில் விழுந்து எரியும்" என்றான். இதற்கு பதில் ஹமீதிடம் இருக்க முடியாது என்று நினைத்தான். ஆனால் பளீரென்று பதில் கிடைத்தது. "வீரர்கள்தான் நெருப்பில் குதிப்பார்கள், ஐயா. உங்கள் சிப்பாயும், வக்கீலும், தண்ணீர்க்காரனும் எல்லோரும் பெண்களைப் போல் வீட்டுள் புகுந்து கொள்ளுவார்கள். என் வீரன் ருஸ்தமே ஹிந்த் தான் நெருப்பில் குதிப்பான்" என்றான்.

மஹமூத் திருப்ப முயன்றான். "வக்கீல் ஐயா மேசை நாற்காலி போட்டுக் கொண்டு உட்காருவார். உன் சிம்டா சமையலுள்ளில் விழுந்து கிடக்கும்" என்றான்.

இந்தத் தர்க்கம் ஸமீ,நூர் இருவருக்கும் ரொம்பப் பிடித்தது - எவ்வளவு

யுக்தமான பேச்சு! சிம்டா சமைய லுள்ளில்தான் விழுந்து கிடக்க முடியும் – வேறென்ன! பட்டென்று பதில் எதுவும் ஹமீதிற்கு உரைக்கவில்லை. "என் சிம்டா சமைய லுள்ளில் விழுந்து கிடக்காது. வக்கீல் ஐயா நாற்காலியில் உட்கார்ந்தாரானால் அவரைப் பிடித்துக் கீழே தள்ளும்" என்று நேர்முகத் தாக்குதலில் இறங்கினான்.

வெற்றிவீரனுக்குத் தோற்றவர்களிடமிருந்து கிட்டும் மரியாதை ஹமீதிற்குக் கிட்டியது. பிறர் எல்லோரும் மூன்று நான்கு அணா செலவு செய்ததுதான் மிச்சம் – உருப்படியாய் ஒன்றும் லாபமில்லை. மூன்றே பைசாவில் ஹமீதின் பெருமை கொடி கட்டிப் பறந்தது. நிசம் தான் – பொம்மை எல்லாம் மண். நிமிஷத்தில் தூளாகலாம். ஹமீதின் சிம்டா வருடம் வருடமாய் அப்படியே இருக்கும். கூட்டாளிகள் தணிந்து போயினர்.

"உன் சிம்டாவைக் கொஞ்சம் தாயேன் – நானும் பார்க்கிறேன். இந்தா நீ என் தண்ணீர்க்காரனைப் பார்" என்றான் மோஹஸின். மஹமூத்,நூர் இருவரும் தங்கள் தங்கள் பொம்மைகளை நீட்டினர். ஹமீதிற்கு இந்த ஏற்பாடு சம்மதமாயிருந்தது. மாறி மாறி எல்லோரும் சிம்டாவை எடுத்து அழகு பார்த்தனர். அவர்களுடைய மொம்மைகளை ஹமீதும் தொட்டுத் தடவிப் பார்த்து மகிழ்ந்தான்.

தன்னிடம் தோற்றவர்களை ஹமீத் தேற்றினான்.

"நான் உங்களை வெறுமனே சீண்டினேன். அவ்வளவுதான். இது இரும்பு சிம்டா தானே – இவ்வளவு தத்ரூபமாய் இருக்கும் பொம்மைகளுக்கு ஈடாகுமா என்ன? இவைகளின் முகத்தில் தான் என்ன களை!" என்றான்.

ஆனால் மோஹஸினின் கட்சி இந்த ஆறுதலால் மகிழவில்லை. சிம்டாவின் மேல் மதிப்பு முத்திரை நன்றாய் பதிந்து போய்விட்டது – அதைத் தண்ணீரால் கழுவி விட முடியாது. "இந்த பொம்மைகளுக்காக யாரும் எங்களை வாழ்த்த மாட்டார்கள்" என்று மோஹஸின் பரிதவித்தான்.

"அடி படாமலிருந்தால் போதாதா? வாழ்த்திற்குப் பரிதவிக்கிறாயே. திருவிழாவில் இந்த மண் பொம்மைதானா கிடைத்தது என்று அம்மா கட்டாயம் மிரட்டுவாள்" என்றான் மஹமூத்.

ஹமீதிற்கு இது சரியென்று பட்டது. இந்த மண் பொம்மைகளைப் பார்த்து எந்தத் தாயும் ஆனந்தப் படப்போவதில்லை. தன் சிம்டாவைக் கண்டு பாட்டி மகிழ்ந்து போவாள்! மூன்றே பைசாதான் அவன் செல்வம். அதை இப்படிச் செலவிட்டதில் அவனுக்கு வருத்தமேயில்லை. அந்த சிம்டா இப்பொழுது நஸ்–தமேஹிந்த் – எல்லா பொம்மைகளுக்கும் ராஜா. வழியில் மஹமூதிற்குப் பசி எடுத்து விட்டது. அவனுடைய தந்தை வாழைப்பழம் வாங்கிக் கொடுத்தார். அதை அவன் ஹமீதுடன் மட்டுமே பகிர்ந்து கொண்டான். பிற கூட்டாளிகள் அவர்களுடைய வாய் அசைவைப் பார்த்தவாறு நின்றனர். சிம்டாவின் சக்தியே சக்தி!!

மணி பதினொன்று. கிராமத்தில் ஒரே கோலாகலம் – திருவிழாவுக்குப் போனவர்கள் திரும்பிவிட்டனர். மோஹஸினின் தங்கை ஓடி வந்து அவனுடைய கையிலிருந்த தண்ணீர்க்கார பொம்மையைப் பிடுங்கிக் கொண்டேகுதித்த குதியில், பாவம், துரை

கீழை விழுந்து நேரே முக்தி அடைந்துவிட்டான். அண்ணனும் தங்கையும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு ஓவென்று அழுதனர். அதைக் கேட்டு அவர்களுடைய அம்மா வெகுண்டு வந்து இருவருக்கும் மேலும் இரண்டிரண்டு அடி வைத்தாள்.

நூர் பெரியவரின் வக்கீல் தரையில் உட்காரமாட்டார் அல்லவா? ஏற்பாடு செய்யத்தான் வேண்டும் அவருக்காக. சுவரிலிருந்து நீட்டிக் கொண்டிருந்த இரு கட்டை மேல் சிறு மணை ஒன்று வைக்கப்பட்டது. அதன் மேல் காகிதக் கம்பளம்



விரிக்கப்பட்டது. ராஜா போஜனைப் போல் சிங்காசனத்தில் உட்காரந்தார் வக்கீல். நூர் அவருக்கு விசிற ஆரம்பித்தான். கோர்ட்டில் வெட்டிவேர்த் தட்டிகளும் மின்சார விசிறிகளும் இருக்கும். இங்கு சாதாரணக் கை விசிறி கூடவா கிடையாது? மூளை கொதித்துப் போகுமே நியாய வாதத்தின் சூடேறி! பனை ஓலை விசிறியால் வீச ஆரம்பித்தான் நூர். விசிறியின் காற்றாலோ, இல்லை விசிறிபட்டோ, வக்கீல் ஐயா சுவர்க்க லோகத்திலிருந்து மரண லோகத்தை நோக்கி வேகமாய் இறங்கி மண்ணோடு மண்ணாகிவிட்டார்.

பிறகு தடபுடலாய் ஒப்பாரி நடந்தது. ஐயாவின் சாம்பல் காற்றுடன் கலக்க வீசி ஏறியப்பட்டது.

இப்பொழுது மிஞ்சியது மஹமூதின் சிப்பாய் - அவரிடம் கிராமத்தின் காவல் வேலை ஒப்புவிக்கப்பட்டது. ஆனால் அந்த போலீஸ் சிப்பாய் சாதாரண மனிதனா என்ன நடந்து போக? சிவிகை வேண்டும் அவர் பவனி வர. ஒரு கூடையில் சில கந்தல்களை விரித்துச் சிவிகை தயாராயிற்று. சிப்பாய் சாஹப் அதில் சுகமாய்ப் படுத்துக் கொண்டார். மஹமூத் கூடையைத் தலைமேல் வைத்துக் கொண்டு வீட்டு வாசல் முன் சுற்றி வந்தான் அவனுடைய இரு சிறு தம்பிகளும் மழலை மொழியில் கட்டியம் கூறிக்கொண்டு முன்னே நடந்தனர் - "தூங்காதீர்கள் - விழிப்புடன் இருங்கள்." இரவல்லவா சமயம்? அந்த இருட்டில் மஹமூத் முட்டிக் கொண்டான். கூடை கை நழுவிக் கீழே விழுந்தது - சிப்பாய் பஹதூர் துப்பாக்கியுடன் கூடவே விழுந்து காலை உடைத்துக் கொண்டார். மஹமூத் டாக்டராக மாறிக் காலைச் சரியாக்க முயன்றான் - அத்திப் பால்தான் ஒடிந்த வாலை சரிசெய்ய நல்ல மருந்து என்று உங்களுக்குத் தெரியுமா? கால் ஒட்டிக் கொண்டது. ஆனால் சிப்பாயால் நடக்க முடியவில்லை. நிற்க வைத்தால் ஒட்டின துண்டு விட்டுக் கொண்டது. ரண சிகிச்சை பிரயோசனப் படவில்லை. சிப்பாயால் மற்றொரு காலையும் ஒடித்தான் மஹமூத். இப்பொழுது சிப்பாய் சௌகரியமாய் உட்கார்ந்து கொள்ள முடிந்தது. ஒரு காலை வைத்துக் கொண்டு நடக்கவும் முடியாமல் உட்காரவும் முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்தாரே. இப்பொழுது இரு கால்களும் முடமாய்ப் போன சிப்பாய் சன்னியாசியாய் விட்டார். ஒரு இடமாய் உட்கார்ந்தபடி காவல் காத்தார். சிறுவர்களின் இஷ்டப்படி ஒவ்வொரு வேளை தெய்வமானார்.

அவருடைய தலையிலிருந்த தலைப்பாகை சுரண்டி எடுக்கப்பட்டது. அவசியப்பட்டபொழுது சிப்பாய் பந்தடிக்கும் மட்டையாகவும் உபயோகப்பட்டார். பாவம் அந்தச் சிப்பாய்!

மியாஹமீதைக் கவனிப்போம். அவனுடைய குரல்கேட்டு ஓடியே வந்து அவனை எடுத்து அணைத்து உச்சி மோந்தான் அமீனா. திடீரென்று அவனுடைய கையிலிருந்த சிம்டாவைக் கண்டு திடுக்கிட்டார்.

"இந்த சிம்டா எங்கே கிடைத்தது ஹமீத்?"

"நான் வாங்கினேன்"

"என்ன விலை?"



"மூன்று பைசா கொடுத்தேன்."

அமீனா ஒப்பாரி வைத்து அழ ஆரம்பித்துவிட்டாள்.

"நடு மத்தியானம் ஆகப்போகிறது. இன்னமும் ஒன்றும் தின்னவுமில்லை குடிக்கவுமில்லை அசட்டுப்பிள்ளை. போயும் போயும் சிம்டாவையா வாங்குவது? அவ்வளவு பெரிய சந்தையில் இந்த இரும்பு சிம்டாவைத் தவிர வேறு எதுவும் அகப்படவில்லையா உனக்கு?"

குற்றவாளியின் குரலில், "உன் விரல்கள் தினம் சப்பாத்தி சுடும் பொழுது வெந்து போகின்றனவே. அதனால் இதை வாங்கி வந்தேன்" என்றான் ஹமீத்.

மூதாட்டியின் கோபம் ஒரு கணத்தில் அன்பாய் மாறிவிட்டது. "பிற பிள்ளைகள் மிட்டாய் வாங்கித் தின்பதையும், பொம்மை வாங்கிக் களிப்பதையும் கண்டு பாவம் இந்தப் பிஞ்சு மனது என்ன பாடு பட்டிருக்கும்! இவ்வளவு கட்டுப்பாடு இவனுக்கு எப்படி வந்தது? அந்தச் சந்தையிலும் பாட்டியின் நினைவாகவே இருந்திருக்கிறானே" என்று நினைத்து நினைத்து அமீனா மெழுகாய் உருகினாள். அவள் நெஞ்சம் நிரம்பி வழிந்தது.

அன்பின் சக்தியே சக்தி! அதனால் செய்ய முடியாதது ஒன்றுமேயில்லை. இப்பொழுது கண் முன் ஒரு அதிசயம் நடந்தேறியது. ஹமீதின் சிம்டாவையும் விட விசித்திரமானது. குழந்தை ஹமீத் அறிவு முதிர்ந்த ஹமீதாய் நடந்து கொண்டான். முதிய அமீனா குழந்தையாகி விட்டாள். உட்கார்ந்து அழ ஆரம்பித்து விட்டாள்! புடவைத் தலைப்பை விரித்தபடி கடவுளின் தயவை வேண்டி உருகினாள். கண்கள் பெரிய பெரிய முத்துக்களைப் பொழிந்தவாறிருந்தன.







ரூ. 15.00 ISBN 978-81-237-5165-8

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா